**ஆரம்ப பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I - 2023**

---

ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 23 ஆம் திகதிய 8878 – எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சுகாதார அமைச்சானது முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக செயற்படுகின்றது.

செயற்திட்டமானது பிரதானமாக கூறு I மற்றும் கூறு II ஆக பிரிக்கப்பட்டுள்ளதுடன் கூறு I மத்திய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் அமுல்ப்படுத்தப்படுகின்றது. நாட்டின் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆகும். செயற்திட்டத்தின் மொத்த கிரயம் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த செலவினங்களையும் அதன் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | கணக்காய்வுப் பிரச்சினை | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 ஆம் பந்தி | i. | 2021/2022அ ஆம் ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தின் ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பெறுகையின் போது செயலாற்றல் பிணையை பெற்றுக்கொண்டிராத காரணத்தால், அரசாங்கத்திற்கு ரூபா 5,806,863 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு நாட்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை ஆராய்ந்து கணக்காய்வு ஐயவினா வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2021 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டின் பின்னரும் நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரமின்மையும் அதில் குறிப்பிடப்பட வேண்டும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட வேண்டும். |
| | ii. | ஒவ்வொரு பொருட்களினதும் சந்தை விலை அதிகரித்தமையால் வழங்குநர்களால் விநியோகிக்கப்படாத கணினி, மடி கணினிகள் மற்றும் அச்சீட்டு இயந்திரம் போன்ற பொருட்கள் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மீள கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | எதிர்பாராத பொருளாதார நெருக்கடி காரணமாக தென் மாகாணத்தில் சுகாதார சேவையை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் நல்லெண்ண அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன், அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தும் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| . ரூபா 30,028,150 ஆன மேலதிக செலவினம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | நோக்கில் இது மேற்கொள்ளப்படவில்லை என்பதை அன்புடன் சுட்டிக்காட்டுகின்றேன். |

3. **பௌதீக செயலாற்றல்**

3.1 **ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **திருகோணமலை – பெரியகுளத்தில் மாகாண வள மத்திய நிலையமொன்றை நிர்மாணித்தல்** | | |
| (i) | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிடைப் பத்திரத்தின் அடிப்படையில் 15 செயற்பாடுகளுக்கு ரூபா 8,348,167 ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது அந்த நடவடிக்கைகளுக்கு ரூபா 12,964,541 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது ஒப்பந்த தொகையிலிருந்து 55 சதவீத அதிகரிப்பாகும். | கட்டுமானச் செயல்பாட்டின் போது சில வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இது கட்டிடங்கள் கட்டுமானத்தைத் தொடங்குவதற்கு முன் தடுப்பு சுவர்களைக் கட்டுவதன் அவசியத்தை வலியுறுத்தியது. | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது கட்டுமானக் கிரயம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட BOQ இல் உள்ளடக்கப்படாத மேலதிகமான நான்கு பணிகளுக்காக ரூபா 3,519,450 செலுத்தப்பட்டிருந்தது. இது ஒப்பந்தத் தொகையிக் 16% ஆகும். கணக்காய்வு களப் பரீட்சை திகதியான 2023 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் இதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப மதிப்பீட்டில் காணியின் நிலைமைகளை மதிப்பிடுவதில் உள்ள சவால்கள் காரணமாக இந்த தேவை எழுந்தது. | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது கட்டுமானக் கிரயம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | அங்கீகரிக்கப்பட்ட BOQ இன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட 115 BOQ உருப்படிகளை அமுல்படுத்துவதற்கு ரூபா 21,445,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்ததுடன், 23 BOQ உருப்படிகளுக்கு ரூபா 16,948,835 ஆன தொகை ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், ரூபா 4,496,164 தொகை மாத்திரம் எஞ்சியிருந்ததுடன், ரூபா 12,345,652 பெறுமதியான 96 நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, ஒப்பந்தத்தின் 37% இனை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 7,849,487 ஆன பெறுமதி மேலதிக பணிகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | BOQ இல் ஏனைய திட்டவட்டமான பணிகளிலிருந்தான சேமிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தாத காரணத்தால் செலுத்தப்பட்ட ஒப்பந்த தொகையில் ஏற்பட்ட உள்ளபடியான வேறுபாடு ரூபா 2,113,590 ஆக காணப்பட்டதுடன், அது கையளிக்கப்பட்ட தொகையில் 9.8% ஆகும். | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது கட்டுமானக் கிரயம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | மாவனல்லை ஆதார வைத்தியசாலையில் இரண்டு மாடி கொள்கலன் களஞ்சியசாலை நிர்மாணிப்பிற்காக 2022 ஆம் ஆண்டு ரூபா 4,087,800 செலுத்தப்பட்டது, அது 2022 ஆகஸ்ட் 30 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டு மாவனல்லை வைத்திய அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கொள்கலன் கிடங்கு மருத்துவமனையிடம் ஒப்படைக்கப்பட்டு 17 மாதங்கள் கடந்தும், முறையான சேமிப்புக்காக கீழ் தளத்தில் அலமாரிகளை நிறுவத் தவறியதால், மருத்துவ குறிப்புகள் அடங்கிய பெட்டிகள் முறையற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன், மேல் தளம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது 2024 பெப்ரவரி 12 ஆம் திகதி நடாத்தப்பட்ட கள ஆய்வின் போது | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | இரண்டு மாடி கொள்கலன் களஞ்சியசாலை அதன் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

அவதானிக்கப்பட்டது.

### 3.2 செயற்திட்ட நோக்கங்களிலிருந்து விலகி மேற்கொண்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பீஎஸ்எஸ்பீ (PSSP) நிகழ்ச்சித்திட்டத்தின் டீஎல்ஐ (DLI) மற்றும் பிரதான நோக்கங்கள் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிராத போது, மீளாய்வாண்டில் வட மேல் மாகாணத்தில் பிரதான நோக்கத்துடன் இணங்கா வகையில் 05 கட்டுமானங்கள் மற்றும் ரூபா 28,252,376 பெறுமதியான அலுவலக உபகரணங்களின் கொள்வனவு அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளும் சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கத்திற்காக செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மறுசீரமைப்புத் திட்டமானது, அரசாங்கத்தின் இணையவழி இலத்திரனியல் பெறுகைகள் முறையின் (e-Promise.lk) கீழ் கேள்வி செயல்முறையை நடத்துவதற்கு, 2021 பெப்ரவரி 18 ஆந் திகதி சுகாதார அமைச்சின் e-Promise குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி, 2021 ஏப்ரல் 01 ஆந் திகதி தேசிய போட்டி இடிப்படையிலான விலைக்கேள்வி கோரல் முறையின் கீழ் விலைக்கேள்வி அழைக்கப்பட்டன மற்றும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி இதற்கான இரண்டு விலைக்கேள்விகள் பெறப்பட்டுள்ளன. 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி விலைக்கேள்விகள் திறக்கப்பட்டு, பல முறை விலைக்கேள்விகளை மதிப்பீடு செய்து, பெறுகைகள் குழுவின் | | |

பல்வேறு முடிவுகளை எடுத்த பிறகு, 2021 திசெம்பர் 22 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் 20% செயலாற்றல் பிணைக்கு உட்பட்டு ஆகக் குறைந்த விலைக்கேள்வியை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்க பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, 2021 திசெம்பர் 30 ஆந் திகதி கூடிய அமைச்சின் பெறுகைகள் குழு இந்த ஒப்பந்தத்தை ரூபா 2,088,738 இற்கு மேற்படி நிறுவனத்திற்கு வழங்க முடிவு செய்து, 2022 ஜனவரி 01, அன்று கொள்வனவுக் கட்டளை வெளியிடப்பட்டது. இதற்காக 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி செயற்திட்டத்தால் ரூபா 2,402,048 செலுத்தப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆகக் கூடிய விலைக்கேள்வியாளரின் விலைக்கேள்வியானது 14 மதிப்பீட்டு அளவுகோல்களில் 12 இனை பூர்த்தி செய்யாமை மற்றும் விலைக்கேள்வி காப்பீட்டினை சமர்ப்பிக்கத் தவறியமையாலும் 2021 மே 10 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் நிராகரிக்கப்பட்டது. குறித்த நிறுவனத்திடமிருந்து கணக்காய்வினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களின் அடிப்படையில், குறித்த நிறுவனம் இந்த ஒப்பந்தத்திற்கு விலைக்கேள்வியை சமர்ப்பித்திருக்கவில்லை என்பதும், விலைக்கேள்விக்கு பயன்படுத்தப்பட்ட கையொப்பம் போலியானது என்பதும்

2021 ஏப்ரல் 30 ஆந் திகதி விலைக்கேள்வி மூடப்பட்ட பின்னர், இரண்டு விலைக்கேள்விகள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிடம் பெறுகைகள் குழுவின் மதிப்பீட்டுக்காக ஒப்படைக்கப்பட்டன. EMS பிரைவேட் லிமிடெட்டின் ஏலத்தில் தொடர்ச்சியான குறைபாடுகள் இருப்பதை TEC அவதானித்திருந்தது மற்றும் Arrogance Technology pvt Ltd இன் வலைதள அபிவிருத்தியில் தொழில்முறை அனுபவம் குறித்து TEC திருப்தியடையவில்லை என்பது TEC க்கு ஒரு பிரச்சினையாக இருந்தது. TEC ஆனது EMS மூலம் இரண்டாவது குறைந்த விலைக்கேள்வியை பரிந்துரைக்கவில்லை மற்றும் பெறுகைகள் குழு திருப்தி அடைந்தால் அல்லது விலைக்கேள்வியை மீளப்பெறுவதற்கு குறைந்த ஏலத்தை

போலி ஆவணங்களை சமர்ப்பித்தது குறித்து விசாரணை நடத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், கால நீடிப்புக்க நன்றி தெரிவித்து கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள கடிதமும் போலியானது என்பது கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. | பரிந்துரைக்கவில்லை. | |
| (ii) | 2021 யூலை 21 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம், குழுவின் ஐந்து அங்கத்தவர்களில் இரு அங்கத்தவர்கள் குழுவில் பங்கபற்றியிராததுடன், அவற்றுள் ஒரு அங்கத்தவர் குழுவின் தீர்மானத்துடன் இணங்கியிருக்கவில்லை. எவ்வாறான போதிலும் குழுவானது ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு தீர்மானம் எடுத்திருந்தது. | முதலாவது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்களில பிழவு காணப்பட்டமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. தீர்மானம் பெரும்பான்மையானது இல்லை. | பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டி 8.9 இன் பிரகாரம், விலைக்கேள்வியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்வியை ஏற்றுக்கொண்ட பின்னர், பெறுகை நிறுவனத்தினால் விலைக்கேள்வியாளருக்கு ஏற்புக் கடிதமொன்று வழங்கப்பட்டு, ஒப்பந்ததாரருடன் உத்தியோகபூர்வ ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும். எவ்வாறெனினும், இந்த ஒப்பந்தத்திற்கு உரியதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமைமை ய உறுதிப்படுத்துவதற்கு எதுவித எழுத்துமூல ஆவணமும் சமர்ப்பிக்கப்படவில்லை. | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில், 2022/2023 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டிற்காக | செயல் நடவடிக்கைத் திட்டத்தை சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் கல்வியாண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிற்சி குடும்ப நலச் சேவை அலுவலர்களுக்கு ஆரம்ப சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துதல் திட்டத்தின் கூறு I மூலம் ரூ.389,343,884 செலுத்தப்பட்டது.<br><br>2023 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி, திறன் மேம்பாட்டிற்காக ரூபா 472 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது, ஆனால் உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. இதன்படி, செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத நடவடிக்கைகளுக்கு செலவு செய்தல், நோக்கத்திற்கு தொடர்பில்லாத நடவடிக்கைகளுக்கு செலவு செய்தல், மோசமான நிதி நிர்வாகம் ஆகியன விசாரணையின் போது அவதானிக்கப்பட்டது. | தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட பெயரில் இந்த குறிப்பிட்ட நடவடிக்கை இடம்பெறவில்லை. | தயாரிக்க வேண்டும். |
| (இ) | தென் மாகாணத்தின் அனைத்து மருத்துவமனைகளினதும் கட்டமைப்புகளுக்கும் வலையமைப்பிற்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களமானது அதற்காக ரூபா 143,432,506 கூட்டுத்தொகை செலவிட்டிருந்தது. கணக்காய்வு கள விஜயத்தின் போது, HHIMs மற்றும் HIMS ஆகிய கட்டமைப்புகள் காலி மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் 50 மருத்துவமனைகளில் செயலிழந்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சுகாதார அமைச்சின் HIMS தரவு அமைப்பின் மார்ச் 2024 இன் தகவலின் படி மாகாணத்தில் உள்ள பெரும்பாலான சுகாதார நிறுவனங்கள் தரவுகளை உள்ளிடியுள்ளன என்று தாழ்மையுடன் தெரிவிக்கப்படுகிறது. | உத்தேச இலக்குகள் அடையப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 முதல் 2022 ஆம் ஆண்டு | மாகாணத்தில் ஒரு பரந்த | இயந்திர |

| | | | |
|---|---|---|---|
| | வரையான காலப்பகுதியில் ரூபா 10,888,860 கிரயத்தில் 211 பண்டக்குறி அச்சீட்டு இயந்திரங்கள் தென் மாகாண மருத்துவமனைக்கு அவ்வப்போது வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த இயந்திரங்களை செயற்படுத்தல் தொடர்பில் எந்த உத்தியோகத்தருக்கும் பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. | பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், தேவையான அதிகாரிகளுக்கு முறையான பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயற்படுத்துநர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். |

### 3.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் மருத்துவமனையால் வழங்கப்படும் சேவைகளை கணினிமயப்படுத்துவதற்கான ஒப்பந்தமானது MH/PB/03/16/2018 ஆம் இலக்க பெறுகை இலக்கத்தின் கீழ் ரூபா 19,496,858 ஆன பெறுமதிக்கு (வற் வரி நீங்கலாக) 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.<br><br>குறித்த செயற்திட்டமானது ரூபா 19,496,857 செலவில் பூர்த்தி செய்யப்பட்டு சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் மருத்துவமனைக்கு 2019 நவம்பர் 19 ஆந் திகதி கையளிக்கப்பட்டது. குறித்த செயற்திட்டமானது உச்ச கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலும், குறித்த கட்டமைப்பினை செயற்படுத்துவதற்கு தொழில்நுட்ப உபகரணங்களின் கொள்வனவு திட்டம் அல்லது செயற்திட்ட அறிக்கையானது 2024 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, குறித்த செயற்திட்டமானது அதன் நோக்கங்களை அடையாது முழுமையாக செயலிழந்து காணப்படுகின்றமை | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சுமார் 3 வருட காலத்திற்கு கணினிமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் சுகாதார தகவல் கட்டமைப்பானது முழுமையான செயற்படவில்லை. | பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மருத்துவ வழங்கல் இருப்பு முகாமைத்துவத்திற்கான MSMIS கணினி கட்டமைப்பானது (Pronto கட்டமைப்பு) 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2023 மே மாதத்தின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது டன், இந்த கட்டமைப்பிற்காக ரூபா 633.6 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2023 யூன் மாதத்தில் இந்த கணினி கட்டமைப்பு நீக்கப்பட்டு, சுவஸ்த எனும் மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்திற்கான விரிவான தகவல் முகாமைத்துவ கட்டமைப்பு பதிலீடு செய்யப்பட்டது. இந்த புதிய கட்டமைப்பினை நிறுவுவதற்காக ஆரம்ப சுகாதார பராமரிப்பு செயற்திட்டத்தின் ஊடாக குறித்த கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தமானது ரூபா 101.8 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2023 யூலை மாதமளவில் ஒரு குறித்த தனியார் கம்பனிக்கு ரூபா 51 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேலும் ரூபா 3.0 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| i. | இந்த விடயத்தில் செயற்படுவதற்கு சுகாதார அமைச்சில் தனியான பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பிரிவு இந்த சுகாதார | சுவஸ்த மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் கட்டமைப்பானது முன்னாள் மருந்துப் பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்கள் இராஜாங்க அமைச்சினால் | நிலவும் மனித வளங்களை பயன்படுத்துவதற்க முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டமைப்பின் கொள்வனவு நடவடிக்கைகளிலோ அல்லது கட்டமைப்பின் தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகளிலோ ஈடுபட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் தீர்மானமாக நிறுவப்பட்டது. ஆரம்ப பராமரிப்பு விநியோக நிறுவன வலையமைப்பிற்கு விஸ்தரிக்க முடியாதிருந்த முன்னர் காணப்பட்ட pronto MSMIS கட்டமைப்பின் சேவைப்படுத்தல் உடன்படிக்கை காலாவதியானதன் பின்னர் இது இடம்பெற்றது. | |
| ii. | ஏற்கனவே சுகாதாரத் துறையில் இயங்கி வந்த HHIMS மற்றும் HIMS போன்ற கட்டமைப்புகளுடன் இந்த சுகாதார அமைப்பை ஒருங்கிணைக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. | சுகாதார கட்டமைப்பு மற்ற சுகாதார தகவல் கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் மற்றும் இந்த அபிவிருத்தியை ஆரம்பிப்பதில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | உத்தேச இலக்கை அடைய புதிய கட்டமைப்பு ஏற்கனவே உள்ள கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். |
| iii. | சுகாதாரக் கட்டமைப்பினை நிறுவும் போது மற்றும் நடைமுறைப்படுத்தும் போது உருவாகியிருந்த பிரச்சினைக்குரிய சந்தர்ப்பத்தை ஆராயும் பொருட்டு 2023 யூன் 30 ஆந் திகதி ஒரு சிறப்புக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு, மருத்துவ வழங்கல் பிரிவு, சுகாதார அமைச்சு, இலங்கை தேசிய வைத்தியசாலை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, போதனா வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 28 பிராந்திய வைத்தியசாலைகள் மற்றும் 12 பிராந்திய மருத்துவ விநியோக பிரிவுகள் நாடளாவிய ரீதியில் பரிசோதிக்கப்பட்டன. | கணினி கட்டமைப்பின் பயனர்களுக்கான அனைத்து வகையான அறிக்கைகள் மற்றும் டாஷ்போர்டு வசதிகள் அனைத்து பயனர்களுக்கும் முழுமையாகக் கிடைக்கும். தற்போது, அனைத்து மருத்துவமனைகள், பிராந்திய மருத்துவ விநியோகத் துறைகள், மருத்துவ விநியோகத் துறைகள், அரச மருந்துக் கூட்டுத்தாபனம், அரச மருந்துப் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் போன்றவை மருத்துவ விநியோக செயல்முறை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த முறையைப் பயன்படுத்துகின்றன. | கணின கட்டமைப்பை திறம்பட இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

இந்த முறைமையைப் பயன்படுத்துவோரின் தேவைக்கு ஏற்றவாறு கணினி கட்டமைப்பு உருவாக்கப்படாததால், அன்றாட நடவடிக்கைகளுக்கு கணினியைப் பயன்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் எழுந்தன. அதன்படி, தற்போதுள்ள ப்ரோன்டோ (Pronto) அமைப்பின் தரவுகளை இந்த அமைப்பில் ஒருங்கிணைக்கும் போது தரவுகளின் துல்லியத்தில் சிக்கல்கள் இருந்தன, மேலும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, மருத்துவ வழங்கல் பிரிவு, அரச மருந்தாக்கற் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனம் போன்ற மருத்துவ விநியோக வலையமைப்பில் ஈடுபட்டுள்ள முக்கிய நிறுவனங்களுக்கிடையில் நல்ல ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படவில்லை என்பதுடன் கணினி கட்டமைப்புடன் இணைக்கப்படவில்லை என்பதையும், தரவு உள்ளீடு மற்றும் தரவு பாதுகாப்பு தொடர்பாக போதுமான கட்டுப்பாடுகள் நிறுவப்படவில்லை என்பதையும், இருப்பு முகாமைத்துவ முடிவெடுப்பதற்கு போதுமான பதிவுகள் இல்லை என்பதையும் கணக்காய்வில் அவதானிக்க முடியந்தது.